## நவம்பர் – 09 – வெள்ளி

### உரோமை லூத்தரன் பேராலய அபிசேக விழா நினைவு

### வாரீர்! ஆண்டவரின் செயல்களைக் காணீர்! திபா. 46:8

## முதல் வாசகம் ஏசேக்கியல் 47:1 – 2,8 – 9,12

அக்காலத்தில் ஒருமனிதர் என்னைக் கோவிலின் நுழைவாயிலுக்கு மீண்டும் அழைத்து வந்தார். அங்கு நான் கோவிலின் வாயிற்படியின் கீழிருந்து கிழக்கு நோக்கித் தண்ணீர் வருவதைக் கண்டேன். ஏனெனில், கோவில் கிழக்கு நோக்கி இருந்தது. தண்ணீர், கோவில் மற்றும் பீடத்தின் தெற்குப் பக்கத்திலிருந்து வந்தது. அவர் என்னை வடக்கு வாயில் வழியாய் அழைத்து வந்து கிழக்கு நோக்கிய வெளிவாயிலின் வெளிப்பகுதிக்கு இட்டுச் சென்றார். இதோ! தண்ணீர் தெற்குப் பகுதியிலிருந்து பாய்ந்து கொண்டிருந்தது. அவர் என்னிடம் உரைத்தது "இத்தண்ணீர் கிழக்குப் பகுதியை நோக்கிப் பாய்ந்து அராபாவில் சேர்கிறது. அங்கு அது கடலோடு கலக்கிறது. அது கடலோடு கலக்கையில் அத்தண்ணீர் அங்கு நல்ல தண்ணீராக மாறும். இந்த ஆறு பாயுமிடமெல்லாம் திரளான உயிரினங்கள் வாழும். அங்கு ஏராளமான மீன்கள் இருக்கும். ஏனெனில் இத்தண்ணீர் பாய்ந்து அங்குள்ள நீரை நல்ல நீராய் மாற்றும். எனவே அது பாயுமிட மெல்லாம் யாவும் உயிர்வாழும்.பலவகையான பழமரங்கள் ஆற்றின் இருமருங்கிலும் வளரும் அவற்றின் இலைகள் உதிரா அவற்றில் கனிகள் குறையா. ஒவ்வொரு மாதமும் அவை கனி கொடுக்கும் ஏனெனில் தூயகத்திலிருந்து தண்ணீர் அவற்றிற்குப் பாய்கின்றது. அவற்றின் கனிகள் உணவாகவும் இலைகள் மருந்தாகவும் பயன்படும்.

**பதில்பாடல் :** ஆற்றின் கால்வாய்கள் ஆண்டவரின் நகருக்குப் பேரின்பம் அளிக்கின்றன.

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 3:9–11,16–17

சகோதர சகோதரிகளே! நாங்கள் கடவுளின் உடன் உழைப்பார்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம். நீங்கள் அவர் எழுப்பும் கட்டடம். கடவுள் எனக்கு அளித்த அருளின்படியே, நான் கைதேர்ந்த கட்டடக் கலைஞர் போல அடித்தளம் இட்டேன். அதன்மேல் வேறொருவர் கட்டுகிறார். ஒவ்வொருவரும் தாம் கட்டும் முறையைக் குறித்துக் கவனமாக இருக்கவேண்டும். ஏற்கெனவே அடித்தளம் இட்டாயிற்று. இவ்வடித்தளம் இயேசு கிறிஸ்துவே. வேறோர் அடித்தளத்தை இட எவராலும் முடியாது நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது. நீங்களே அக்கோவில்.

## நற்செய்தி : யோவான் 2 : 13 - 22

யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசு எருசலேமுக்குச் சென்றார். கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும், அங்கே உட்கார்திருந்த நாணயம் மாற்று வோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி, அவர்கள் எல்லாரையும் கோவிலிலிருந்து துரத்தினார் ஆடு. மாடுகளையும் விரட்டினார். நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டிவிட்டு மேசைகளையும் கவிழ்த்துப்போட்டார். அவர் புறா விற்பவர்களிடம், "இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள் என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்" என்று கூறினார். அப்போது அவருடைய சீடர்கள். "உம் இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்" என்று மறைநூலில் எழுதியுள்ளதை நினைவு கூர்ந்தார்கள். யூதர்கள் அவரைப் பார்த்து, "இவற்றையெல்லாம் செய்ய உமக்கு உரிமை உண்டு என்பதற்கு நீர் காட்டும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக அவர்களிடம், "இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்றுநாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" என்றார்.அப்போது யூதர்கள், "இந்தக் கோவிலைக் கட்ட நாற்பத்தாறு ஆண்டுகள் ஆயிற்றே! நீர் மூன்றே நாளில் இதைக் கட்டி எழுப்பி விடுவீரோ?" என்று கேட்டார்கள்.ஆனால் அவர் தம் உடலாகிய கோவிலைப்பற்றியே பேசினார்.அவர் இறந்து உயிருடன் எழுப்பப்பட்டபோது அவருடைய சீடர் அவர் இவ்வாறு சொல்லியிருந்ததை நினைவு கூர்ந்து மறைநூலையும் இயேசுவின் கூற்றையும் நம்பினர்.

**தியானம்:** ஆலயங்களின் நேர்ந்தளிக்கும் நாள் என்பது பேராலயத்தின் பிறந்த நாள் என்றழைக்கும் வழக்கமும் இருந்தது. உரோமை திருவெளிப்பாட்டு மரபில் அர்பணிக்கப்பட்ட பேராலயத்திற்கான நான்கு விழாக்களை திருச்சபை முழுவதும் கொண்டாடுகிறது. இலாந்தரன் பேராலயம், புனித பேதுரு பேராலயம், புனித பவுல் பேராலயம் மற்றும் புனித மரியாள் பேராலயம். இதில் இலாந்தரன் ஆலயத்தின் அர்ப்பணிப்பு விழாவை இன்று நாம் கொண்டாடுகிறோம். முதல் நூற்றாண்டில் நீரோ மன்னன் கிறிஸ்தவர்களை வதைத்து பல பேரை கொன்றழித்தது வரலாறு. அப்படி அவன் கிறிஸ்தவத்திற்கு எதிராகசெயல்பட்டுக் கொண்டிருந்த போது, அவனுக்கு எதிராக சதி செய்தவர் என்று, இலாந்திரன் என்னும் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த பிளவுத்துஸ்லாத்தரன் என்பவர் கொல்லப்பட்டார். கொன்ற பிறகு அந்த குடும்பத்திற்கு சொந்தமான மாளிகை, உடமைகள் என்று அவனுடைய சொத்துக்களையும் அபகரித்து கொண்டான். பின்னர் வந்த உரோமை அரசனான கான்ஸ்டன்டைன் அரசர் கி.பி313ம் ஆண்டு கிறிஸ்தவத்தை நாட்டின் அதிகாரப்பூர்வ மதமாக மாற்றினார். அப்போது இலாந்திரன் குடும்பத்தினரிடமிருந்து பறித்துக்கொண்ட அந்தசொத்தை உரோமை ஆயருக்கு (திருத்தந்தை மெல்தியாதஸ்) அன்பளிப்பாக கொடுத்தார் அந்த இடத்தில் அழகிய ஓர் ஆலயம் எழுப்பப்பட்டது. ஆதை அவருக்குப் பின் வந்த திருத்தந்தை சில்வஸ்டர் புனித மீட்பருக்கு அர்ப்பணித்தார் . கி.பி.896இல் நடந்த நில நடுக்கத்தில் . லாத்தரன் மாளிகை சேதப்பட்டது . கி.பி 904 முதல் 911 வரை திருச்சபையை ஆண்ட திருத்தந்தை 3ஆம் செர்ஜியுஸ், அதைப் புதுப்பித்து புனித திரு முழுக்கு யோவானுக்கு இதை அர்பணித்தார். அதனோடு லாத்தரன் குடும்பப் பெயரும் சேர்த்து, புனித திருமுழுக்கு யோவான் லாத்தரன் ஆலயம் என்றும், வெறுமனே லாத்தரன் ஆலயம் என்றும், இது அழைக்கப்படலாயிற்று. உரோமை நகர கதீட்ரல் ஆலயம் இதுவேயாகும். பழமையான ஆலயமும் இதுவே ஆகும். கி.பி.நான்காம் நூற்றாண்டிலிருந்து பதிநான்காம் நூண்டாண்டு வரை இது தான், திருத்தந்தையர்களின் இல்லமாக விளங்கி வந்தது. 28திருத்தந்தையர்களின் உடல்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐந்து திருச்சங்கங்கள் இங்கு தான் நடைப்பெற்றது. இங்கு தான், திருத்தந்தையர்களால் தொடக்கத்தில், திருமுழுக்கு, அருட்சாதனங்களும், புனித வாரச்சடங்குளும், நிறைவேற்றப்பட்டன. உரோமையிலிலுள்ள அனைத்து ஆலயங்களுக்கும், உலகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஆலயங்களுக்கும், இது தான் தாய்க்கோயிலாகும். உரோமைமறைமாவட்டத்தன் தலைமைக்கோயிலும் (cathedral)இது தான். இந்த திருக்கோயிலைத்தான் இன்று விழாவாக கொண்டாடுகிறோம். சிறப்பாக இன்று நாம் அனைவரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மற்றும கன்னியர்களுக்காக சிறப்பாக மன்றாடுவோம்